சுருக்கம்

கலை பண்பாட்டுத் துறை – அறிவிப்புகள்– 2019–2020ஆம் ஆண்டு – தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம்– மறைந்த மூத்த கலைஞர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்குதல் – மூல நிதியினை ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்துதல் – கூடுதல் தொகை ரூ.21.24 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (நிலை) எண்.166

நாள்:13–11–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், ஐப்பசி–27

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண் 31 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்2)த் துறை, நாள் 29.01.2015.
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். 3954 /இ1 / 2019, நாள் 21.08.2019.

*****

ஆணை:–

நலிந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு உதவுவதை அரசு கொள்கையாக கொண்டுள்ளது. இயல், இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் திரைப்படத் துறைகளில் அரும்பணியாற்றி புகழுடன் விளங்கி தம்முடைய குடும்பத்தினரை ஆதரவற்ற நிலையில் விட்டு மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு குடும்ப பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1983ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பகாலத்தில், மறைந்த கலைஞர்களின் வாரிசுதாரருக்கு தலா ரூ.2,000/– வீதம் குடும்பப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டது. பின்னர், இத்தொகை படிப்படியாக உயர்த்தப்பட்டு 2015–2016ஆம் ஆண்டு முதல் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக ரூ.10,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ஆண்டுதோறும் 10 முதல் 12 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2. குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கான அரசின் மூலதனத் தொகை ரூ.28.76 இலட்சம் (ரூ.16.56 இலட்சம் அரசின் மூலதனத் தொகை + ரூ.12.20 இலட்சம் வட்டித் தொகை) (Corpus Fund) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திலும், தமிழ்நாடு போக்குவரத்து நிதி வளர்ச்சிக் கழகத்திலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(த.பி.பா)

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.07.2019 அன்று கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அவர்களால் கீழ்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> "மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகை, ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் எனவும் இதற்காக மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட மூலநிதியினை ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் எனவும் இதற்கென, தொடராச் செலவினமாக கூடுதலாக ரூ.21.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்"

4. மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாக, ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்குவதற்கு மன்றத்தில் இதற்கென ஏற்படுத்தப்பட்ட மூலநிதியினை ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்துவதற்கு கூடுதலாக ரூ.21.24 இலட்சம் தொகையினை 2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து ஒப்பளிப்பாணை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் 15.07.2019 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று பின்வறுமாறு அரசு ஆணையிடுகிறது:–

I. இயல், இசை, நாட்டியம், நாடகம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் திரைப்படத் துறைகளில் அரும்பணியாற்றி புகழுடன் விளங்கி தம்முடைய குடும்பத்தினரை ஆதரவற்ற நிலையில் விட்டு மறைந்த கலைஞர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் ஒருமுறை மட்டும் வழங்கப்படும் குடும்ப பராமரிப்பு உதவித் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தப்படுகிறது.

II. இதற்கான அரசின் மூலநிதி ரூ.28.76 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு, 2019–2020ஆம் நிதியாண்டில், தொடராச் செலவினமாக கூடுதலாக ரூ.21.24 இலட்சம் தொகை நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

6. மேலே பத்தி 5(II)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – AH தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு மானியங்கள் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
> (IFHRMS த.தொ.கு.2205 00 102 AH 30903)
> (பழைய த.தொ.கு. 2205 00 102 AH 0938)

7. மேலே பத்தி 5(II)–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. மேலே பத்தி 5 (II)–ல் ஒப்பளிக்கப்பட்ட நிதிக்கு தேவைப்படும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.21,24,000/–ஐ 2019–2020ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் / சிறப்பு நிகழ்வாக ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 5 (II)–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2019–2020 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019–2020 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019-2020) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II/வசெபொ–I)த் துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.53789/நிதி(கல்வி–II)துறை/2019, நாள்07.11.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதியொதுக்க பேரேட்டு எண் 2029 (இரண்டாயிரத்து இருபத்து ஒன்பது)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அஷோக் டோங்ரே
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
உறுப்பினர்–செயலர்/பொருளாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை–28.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA/ E&RSA/ A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
நகல்:–
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15.11.2019
பிரிவு அலுவலர்
13/11/19